24.06.2024.

O.S.No. 124/2017

PW1

**<u>திரு நவீன்குமார்.</u>**

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மீண்டும் 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

1ம் பிரதிவாதி கிரைய உடன்படிக்கை எனக்கு பதிவு செய்து கொடுக்கும்போது எல்லா அசல் ஆவணங்களையும் என்னிடம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் அதிகார முகவர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான அதிகார முகவர் என்னுடன் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்திகொண்ட பின்னர் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். 25.10.2017 அன்று அவ்வாறு அதிகார பத்திரத்தை ரத்து செய்ததை எனக்கு தெரிவித்து அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி அதிகார பத்திரத்தை ரத்து செய்தது தொடர்பாக 6.12.2017 அன்று 3ம் பிரதிவாதிக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி எழுதிகொடுத்த அதிகார பத்திரத்தை ரத்து செய்துகொடுத்துவிட்டதால்தான் எனக்கு 1ம் பிரதிவாதி கிரைய பத்திரம் எழுதிகொடுக்கமுடியவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட அதிகார பத்திரத்தை ரத்து செய்ததால்தான் எனக்கு கிரைய பத்திரம் எழுதிதர முடியவில்லை என்றும் நான் அவர் மீது தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>**